# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 29.07.2018

## தமிழக நிகழ்வுகள்

- தமிழகத்தின் ஸ்ரீவில்லிபுத்தூர் - மேகமலை உள்ளடக்கிய வனப்பகுதிகளை, புலிகள் சரணாலயமாக அறிவிக்க, தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் முடிவு செய்துள்ளது.
  - தமிழ்நாட்டில், 2006ம் ஆண்டில், 76 ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை 2014-ஆம் ஆண்டில் 229 ஆக உயர்ந்துள்ளது.
- குறிப்பு
  - புலிகள் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு – 1973
  - சாம்பல் நிற அணில்களின் சரணாலயம் உள்ள இடம் - ஸ்ரீவில்லிபுத்தூர்
  - தமிழகத்தில் 15 வனவிலங்குகள் சரணாலாயமும், 15 பறவைகள் சரணாலயமும் 5 தேசிய பூங்காக்களும், 3 நில உயிர்கோள காப்பகங்கள் (Bio – Sphere) மற்றும் 30.92 சதவீத பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி ஆகியவை உள்ளன.

- தமிழக அரசின் சார்பில், சென்னையில் உள்ள மாதவரத்தில் மீன் ஊட்டச்சத்து மற்றும் உணவு தொழில்நுட்பக் கல்லூரி ஜூலை 24 அன்று தொடங்கப்பட்டுள்ளது.
- இக்கல்லூரியானது, நாகப்பட்டினத்தில் உள்ள ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும்.

## இந்திய நிகழ்வுகள்

- நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் வகையிலும் உயர்கல்வியின் தற்போதைய நிலையை அறிந்து கொள்ளும் வகையிலும் ஆயிஷா சர்வே என்னும் அமைப்பு புள்ளி விவரங்களை வெளியிட்டு வருகின்றன.
  - இதன்படி 2017-18ம் ஆண்டுக்கான உயர்கல்வி சேர்க்கை விகிதம்

அடிப்படையில் சண்டிகர் முதலிடத்திலும் தமிழ்நாடு இரண்டாம் இடத்திலும் உள்ளதாக அறிவித்துள்ளது.

- பொது மற்றும் தனியார் துறைகளில் சிறந்த சுற்றுச்சூழல் செயல்பாடுகளை அங்கீகரிக்கும் பூமி விருது – 2018 ஆனது கொச்சி சர்வதேச விமான நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. (CIAL – The Cochin International Airport Limited)
  - உலகின் முதல் விமான நிலையமாக முழுமையாக சூரியசக்தி மூலம் இயக்கப்பட்டதற்கு இவ்விருதானது வழங்கப்பட்டுள்ளது.

- ஹரியானாவின் மாநில வளர்ச்சி குறித்து அடையாளம் காண, ஹரியானா முதலமைச்சர் மனோகர் லால் கத்தாரின் தலைமையின் கீழ் மாவட்ட வாரியாக குழு inter – district council அமைக்கப்பட்டுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- சுதந்திர போராட்ட வீரரும், முதல் உள்துறை அமைச்சருமான சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு உகாண்டா நாட்டின் கம்பாலா நகரில் மார்பளவு சிலை அமைக்கப்பட்டுள்ளது.
  - இச்சிலை இந்திய பிரதமரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- குறிப்பு:
  - உகாண்டா நாட்டின் தலைநகர் கம்பாலா
  - இந்தியாவின் இரும்பு மனிதர் - சர்தார் வல்லபாய் படேல்

## விளையாட்டு நிகழ்வுகள்

- கர்நாடகாவில் 4 வயதே ஆன சான்வி அகர்வால் என்ற சிறுமி, 5 வயதுக்குட்பட்டோருக்கான தேசிய அளவிலான சதுரங்க சாம்பியன் ஷிப் போட்டியில் 2-ஆம் இடம் பெற்றுள்ளார்.
  - இதன் மூலம் அடுத்த ஆண்டு 6 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய இளையோர் சாம்பியன் போட்டியில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளார்.

- மகளிர் வில்வித்தை போட்டிக்கான உலக தரவரிசைப் பட்டியலில் இந்திய மகளிர் வில்வித்தை (காம்பவுண்டு) அணி முதலிடத்தைப் பிடித்து சாதனைப் படைத்துள்ளது.

➢ அண்மையில் அன்டாலியா, பெர்லினில் நடைபெற்ற உலகக் கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்திய மகளிர் வில்வித்தை அணி இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றது குறிப்பிடத்தக்கது.

**அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்**

- விஸ்டர் - 500 – என்னும் முழுவதும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட முதல் காற்று சுத்திகரிப்பான் கருவி சென்னை ஐஐடியில் (IIT – Chennai) வடிவமைக்கப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

**புத்தகங்கள்**

- When coal turned Gold : The Making of a Maharatna company – என்னும் புத்தகம் சமீபத்தில் பார்த்தசாரதி பட்டாச்சார்யாவால் (கோல் இந்தியா நிறுவனத்தின் முன்னாள் தலைவர்) எழுதப்பட்டுள்ளது.

We Shine Academy™